**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8–ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.130/2019**

**CNR- TNKK-000448-2019**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>கொற்றிக்கோடு காவல் நிலையம்.<br>குற்ற எண்.12/2018 |
| எதிரியின் பெயர் | : | சுரேஷ், (வயது 46)<br>த/பெ. சுந்தரமணி<br>பாலவிளை<br>குழித்துறை அஞ்சல் |
| அரசு தரப்பில் எதிரியின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள்.341, 294(பி), 307, 427 ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள்.341, 294(பி), 307, 427 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| நீதிபதியின் முடிவு | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள்.341, 294(பி), 307, 427 ன் படி குற்றவாளி இல்லை. |
| தீர்ப்புரை | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள்.341, 294(பி), 307, 427 ன் படி குற்றவாளி அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரியை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கில் ஆர்.பி. எண்2/2024–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.2 TN 75 L 0290 டி.வி. எஸ். வேகோ இரு சக்கர வாகனம் நீதிமன்ற பாதுகாவலில் இருப்பதால் அதனை மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் ஆர்.பி. எண். 26/2023–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1, சா.பொ.3, சா.பொ.4, சா.பொ.5 ஆகியவைகளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பு 25.03.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பால்பிள்ளை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

14.01.2018ம் தேதி மாலை சுமார் 6.45 மணிக்கு சாட்சி 1 சந்திரசேகர் தனது நண்பர் ரெஜி என்பவரின் TN 75 AT 4397 வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து சென்று கொண்டிருக்கும் போது, சடையார் சப்பாத்து பாலத்தில் வைத்து எதிரி 75 L 0290 மோட்டார் சைக்கிளை வைத்து சாட்சி 1 யை முன் பகை காரணமாக

வழக்கு சம்மந்தமாக செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி நீ உயிரோடு இருந்தால் தானே வழக்கை நடத்துவாய் என்று கூறி அவனது இரு சக்கர வாகனத்தில் இருந்த அரிவாளை எடுத்து பிண்டாமோனே தேவடியாமோனே இத்தோடு செத்து தொலைந்து போ என்று கூறி சாட்சி 1ன் இடது பக்க கழுத்தில் வெட்டவே சாட்சி 1 அதை இடது கையால் தடுத்த போது சாட்சி 1 ன் இடது கையில் காயம் ஏற்பட்டு சாட்சி 1 வந்த மோட்டார் சைக்கிளை வெட்டி சேதப்படுத்தி ரூ.1000/– இழப்பு ஏற்படுத்தியும் அரிவாளை காட்டி மிரட்டிய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341, 294(பி), 307, 427 ன் படி கொற்றிக்கோடு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 22/2019 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு எண்.130/2019 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும்,

எதிரி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள்.341, 294(பி), 307, 427 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ–8 குறுக்கு விசாரணையின் போது எ.சா.ஆ–1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 முதல் 5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**</u>

அ.சா.1 சந்திரசேகர் தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரி சுரேஷ் என்பவரை தனக்குத் தெரியும் என்றும், 14.01.2018ம் தேதி தான் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு மாலை சுமார் 05.00 மணியளவில் வந்ததாகவும், அப்போது தனது மனைவி தன்னிடம் எதிரி வீட்டிற்கு வந்து தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும், கெட்டவார்த்தையால் ஏசியதாகவும் கூறியதாகவும் மேலும் தன்னை அருவாளால் வெட்டி விடுவதாகவும் எதிரி கூறிவிட்டு சென்றதாக தனது மனைவி தன்னிடம் கூறியதாகவும், அதன் பிறகு தான் வீட்டிற்கு வேண்டிய சாதனம் வாங்குவதற்காக பெருஞ்சிலம்பிற்கு சென்று விட்டு தனது நண்பர் ரெஜி என்பவரது இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட தான் பின்னால் அமர்ந்து வந்துக் கொண்டிருந்த போது சடையாறு சப்பாத்து ரோட்டில் வைத்து மாலை சுமார் 05.45 மணியளவில் எதிரி ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் வந்து தாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை மறித்து எதிரி தான் வந்த வாகனத்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து தனது கழுத்தை நோக்கி வெட்ட

முயற்சித்த போது தான் அதை தடுத்ததால் தனது இடது முழுங்கையில் வெட்டுப்பட்டதாகவும், அதனால் தான் சத்தம் போட்டதாகவும், அதனால் ராஜசேகர், தர்மராஜ் மற்றும் நிறைய நபர்கள் ஓடி வந்ததாகவும், உடனே எதிரி தாங்கள் வந்த இருசக்கர வாகனத்தில் அருவாளால் அடித்து விட்டு தன்னுடைய ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டதாகவும், பின்னர் தன்னை ரெஜி என்பவர் தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் மருத்துவமனையில் வைத்து போலிசார் தன்னை விசாரணை செய்த போது போலிசாரிடம் வழக்கு சம்பவம் குறித்து தான் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் தான் சொல்ல, சொல்ல போலிசார் எழுதிக் கொண்டதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. இவ்வழக்கு சம்மந்தமாக தன்னை கொற்றிக்கோடு போலிசார் விசாரணை செய்ததாகவும், சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய அரிவாள் இது தான். அந்த அரிவாள் சா.பொ.1 என்றும், சம்பவத்தின் போது ஆஜர் எதிரி வந்த வாகனம் என்னிடம் காட்டப்படுவது தான் TN 75 C 0290 டி.வி. எஸ். வேகோ இருசக்கர வாகனம் சா.பொ.2 என்றும், சம்பவம் நடக்கும் போது நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் உடைந்த முகப்பு விளக்கின் பிளாஸ்டிக் துண்டு சா.பொ.3 என்றும், பின்பக்கம் பார்க்கக்கூடிய கண்ணாடியின் கவர் சா.பொ.4 என்றும், இன்டிகேட்டர் சா.பொ.5 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 ரெஜி தனது சாட்சியத்தில் அ.சா.1ஐ தனக்குத் தெரியும் என்றும், ஆஜர் எதிரியையும் தெரியும் என்றும், தான் 14.01.2018ம் தேதி மாலை 06.45 மணிக்கு பெருஞ்சிலம்பிலிருந்து – விழாப்புறத்தில் தன் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த போது பெருஞ்சிலம்பிலிருந்து அ.சா.1 சந்திரசேகர் தனது வாகனத்தில் ஏறி வந்ததாகவும், சடையாரில் வைத்து எதிரி நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி அரிவாளை எடுத்து சந்திரசேகரை

வெட்டியதாகவும் சந்திரசேகருக்கு இடது முழங்கையின் அருகே காயம் ஏற்பட்டதாகவும், பிறகு அவரை ஆட்டோவில் ஏற்றி தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 ரவிராஜசேகர் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ தனக்குத் தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தானும் தர்மராஜ் என்பவரும் ஆற்றில்குறிப்பதற்காக சடையாறுக்கு 14.01.2018ம் தேதி 06.45 மணிக்கு வந்ததாகவும், சந்திரசேகரரும், ரெஜியும் பைக்கில் சென்று கொண்டிருந்ததாகவும், எதிரி சந்திரசேகர் சென்ற இருசக்கர வாகனத்தை மிதித்து தள்ளி அவர்களுக்குள் கை கலப்பு நடந்ததாகவும் எதிரி அருவாளை எடுத்து வீசியதில் சந்திரசேகரருக்கு இடது கையில் காயம் பட்டதாகவும் நிறைய ஆட்கள் கூடியதும் எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டதாகவும் காயம்பட்ட சந்திரசேகரை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்,

9. அ.சா.4 செல்லப்பன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தேதி ஞாபகமில்லை என்றும், காலை 09.00 மணியளவில் கொற்றிக்கோடு போலீசார் தனது கடைக்கு வந்து பெருஞ்சிலம்பு சடையால் என்ற இடத்தை போலீசார் பார்வையிட்டதற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் என்றும், கையொப்பம் போட்டுக்கொடுத்ததாகவும், தன்னுடன் கார்த்திக் என்பவரும் கையொப்பம் போட்டுக்கொடுத்ததாகவும் அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.7 வினுகுமார் தனது சாட்சியத்தில் சந்திரசேகர் என்பவரை தனக்குத் தெரியும். பஜாஜ் C.T.100 வாகனத்தை முகப்பு விளக்கு இன்டிகேட்டர், சைடு கிளாஸ் ஆகியவை உடைந்த நிலையில் வேலைக்கு கொடுத்ததாகவும்,

அந்த இருசக்கர வாகனத்தை சரி செய்து கொடுத்ததாகவும் ரூ.1000/– பெற்றுக்கொண்டதற்காக ஒருபேப்பரில் எழுதி கொடுத்ததாகவும், தான் எழுதி கொடுத்த ரசீது அ.சா.ஆ.3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.8 டாக்டர். தங்கவேல் தனது சாட்சியத்தில் தான் இதற்கு முன்னர் தக்கலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 14.01.2018 அன்று மருத்துவராக பணிபுரிந்த போது இரவு 10.15 மணியளவில் பெருஞ்சிலம்பு விலாபுறத்தை சேர்ந்த திரு. சந்திரசேகர் (48) தன்னை தெரிந்த நபர் தனக்கு வீட்டின் அருகில் வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறி சிகிச்சை பெற வந்ததாகவும் அவரை பரிசோதித்ததில் அவருக்கு இடது முழங்கைக்கு கீழ் 3x 1 x 1 cm அளவிலான சிதைவு காயம் காணப்பட்டதாகவும், இடது முழங்கைக்கு கீழ் 7x 0.2 cm அளவிலான மெல்லிய நீளமான சிதைவு காயம் என்றும், வலது முழங்கைக்கு கீழ் 1 x 1 cm அளவிலான சிராய்ப்பு காயம் என்றும், காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 17.01.2018ம் தேதி மருத்துவ சிகிச்சையிலிரந்து விடுவிக்கப்பட்டதாகவும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1,2,3 ஆகியவை சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாகவும் அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 என்றும் சாட்சியம் அளித்துள்ளாளர்.

12. அ.சா.9 ஜான் கிறிஸ்டோபர் தனது சாட்சியத்தில், இதற்கு முன்னர் 15.01.2018ம் தேதி காலை 06.30 மணிக்கு கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் பொறுப்பு உதவி ஆய்வாளராக இருந்த போது தக்கலை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற இன்டிமேஷனை பெற்று 07.00 மணிக்கு தக்கலை அரசு மருத்துவமனைக்கு வந்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சந்திரசேகரன் அவர்களிடம் ஒருபுகார் வாக்குமூலம் பெற்று 08.00 மணிக்கு கொற்றிக்கோடு காவல்நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மை

படி நிலைய குற்ற எண். 12/2018 பிரிவுகள் 341, 294(பி), 307, இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடைசெய்தல் சட்டப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், இவ்வழக்கில் எதிரியான சுரேஷ் என்பவரை நிலையம் அழைத்து வந்திருந்ததாகவும் அவருக்கும் காயங்கள் இருந்ததால் கொற்றிக்கோடு காவல்நிலைய நமூனா 2/2018 என கொடுத்து தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.10 ரவீந்திரன் தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 14.01.2018ம் தேதி தக்கலை காவல்நிலைய கூடுதல் பொறுப்பை கவனித்து வந்ததாகவும் அப்போது 15.01.2018ம் தேதி திருவட்டார் காவல்நிலைய ஆய்வாளராகிய தான் ரோந்து பணியில் இருந்த போது கூடுதல் பொறுப்பு வகித்த தக்கலை வட்ட காவல்நிலைய சரகத்தைசார்ந்த கொற்றிக்கோடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் என்பவர் பதிவு செய்த கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.12/2018 பிரிவுகள் 294(பி), 341, 307 இ.த.ச மற்றும் 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுவதை தடை செய்யும் சட்டபடி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை 15.01.2018ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.01.2018 காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லப்பன், கார்த்திக் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 என்றும், புகார்தாரர் சந்திரசேகரன், ரவி ராஜசேகர், தர்மராஜ், மற்றும் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் ஆகியவர்களை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் விடுமுறையில் சென்ற காவல் ஆய்வாளர் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்து விட்டதாகவும் சாட்சியத் அளித்துள்ளார்.

14. அ.சா.11 சிவசங்கரி தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 20.01.2018ம் தேதி கொற்றிகோடு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் என்பவர் கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண். 12/2018 பிரிவுகள் 294(பி), 307, 341, இ.த.ச மற்றும் 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டபடியான வழக்கை பதிவு செய்து அந்த வழக்கை திருவட்டார் காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு. ரவீந்திரன் அவர்கள் முதல்விசாரணை செய்து ஒப்படைக்கப்பட்ட வழக்கு கோப்பை நான் 20.01.2018ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்த போது சாட்சிகள் சந்திரசேகர், ரெஜி, ரவி ராஜசேகர் ஆகியவர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும் தர்மா, செல்லப்பன், கார்த்திக் ஆகியவர்கள் முந்தைய காவல் ஆய்வாளரிடம் கூறியது போலவே தன்னிடமும் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்த படியால் வழக்கின் எதிரியை தேடிய போது கிடைத்த ரகசிய தகவல் படி வழக்கின் எதிரியான சுரேஷ் என்பவரை வேர்கிளம்பி சந்திப்பு சாமியார்மடம் திருப்பு அருகே வைத்து 10.30 மணிக்கு கைது செய்ததாகவும், அவரை விசாரிக்க அவர் எவ்வித துன்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரமேஷ், செல்வின் ஆகியவர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.00 மணிக்கு எதிரி ஆஜர் செய்த அரிவாள் மற்றும் TN 75 L 0290 என்ற ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.8 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 என்றும், படிவம் 95 – அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 என்றும், பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும் இவ்வழக்கில் சேதப்படுத்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு சேதமதிப்பு வழங்கிய சாட்சி வினுகுமார் என்பவரை விசாரித்து சேதமதிப்பு பெற்றேன். எனக்கு பணி மாறுதல் வந்து விட்ட படியால் வழக்கு கோப்பை தனக்கு பின்னர் வந்த காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா'12 அருள்பிரகாஷ் தனது சாட்சியத்தில் 15.01.2018ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துதாஸ் என்பவர் பதிவு செய்து காவல் ஆய்வாளர்கள் திரு. ரவீந்திரன் மற்றும் திருமதி.சிவசங்கரி அவர்களால் முதல் விசாரணை செய்யப்பட்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.12/2018 பிரிவுகள் 341, 294(பி), 307 இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்ட படியான வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும் 23.02.2019ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் திரு. தங்கவேல் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றையதினம் வழக்கின் சட்ட பிரிவினை பிரிவு 3(1) பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டப்படியான பிரிவை நீக்கி பிரிவு 427, இ.த.ச படி சட்டம் மாறுதல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அந்தஅறிக்கை அ.சா.ஆ.13 என்றும், அன்றைய தினமே இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் பின்னர் 28.04.2 019ம் தேதியன்று வழக்கின் எதிரியின் இருப்பிட முகவரியை திருத்தம் செய்து வழக்கு கோப்பில் சேர்ப்பதற்கு விண்ணப்பம் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

17. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

18. ***<u>பிரச்சனைக்கான தீர்வு</u>*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, எதிரிக்கும் அ.சா.1க்கும் இடையே ஏற்பட்ட வழக்கு தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் 14.1.2018ம் தேதி மாலை 6.45 மணிக்கு அ.சா.1ம் அ.சா.2ம் அ.சா.2க்கு சொந்தமான TN 75 AT 4397 என்ற இரு சக்கர வாகனத்தித்தில் சடையார்சப்பாத்து பாலத்தில் வந்து கொண்டிருந்த போது எதிரி அவரது 75 L 0290 மோட்டார் சைக்கிளில் அ.சா.1, அ.சா.2 ஐ வழிமறித்து அசிங்கமாக பேசி அரிவாளால் அ.சா.2 ஐ வெட்டி கொலை செய்ய முயற்சி செய்த போது அ.சா.1 தடுத்ததால் அவரது இடது முழுங்கையில் வெட்டி காயம் ஏற்பட்டது என்பது காயம்பட்ட அ.சா.1 சாட்சியத்திலிருந்தும் சம்பவத்தை கண்ணால் கண்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்திலிருந்தும், காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை வழங்கிய அ.சா.8 மருத்துவர் சாட்சியத்திலிருந்து அ.சா.ஆ.4 காயச்சான்றிலிருந்தும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

19. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, இவ்வழக்கின் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட வேண்டுமென்பதற்காக கொற்றிக்கோடு போலிசார் அவரை அழைத்து சென்று தாக்கியதில் உயிரிழந்து விடுவோம் என்ற பயத்தில் காவல் நிலையத்தில் இருந்த கையிருப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான புகாரை உற்பத்தி செய்து பொய் வழக்கு போடப்பட்டதாகவும், 14.1.2018ம் தேதி காலை 6.45 மணிக்கு நடைபெற்றதாக கூறப்படும் சம்பவத்துக்கு 15.1.2018ம் தேதி காலை 7 மணிக்கு சுமார் 12 மணி நேரம் காலதாமதமாக புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதுடன் 3 நாட்கள் காலதாமதமாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்றடைந்ததாகவும் மேலும் எதிரியை போலிசார் தாக்கியதில் காயமடைந்து சிகிச்சை பெற்றார் என்ற விவரத்தையும் அ.சா.8 மருத்துவரின் சாட்சியத்திலிருந்தும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு காயங்கள் ஏற்பட்ட விதத்தை அரசு தரப்பு எடுத்துக்காட்டாதது அரசுத்தரப்பு வழக்கின் உண்மை தன்மையை பாதிப்பதாக உள்ளதாகவும், அ.சா.1க்கு அவர் கூறியது போல காயங்கள் இல்லை என்பது அ.சா.ஆ.4 காயச்சான்றிலிருந்து தெரிய வரும் என்றும் எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

20. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

21. அரசு தரப்பு வழக்கின் படி அ.சா.1க்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன் வழக்கு தொடர்பாக முன் விரோதம் என்று குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திற்கு முன்னர் சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் இதே எதிரி அ.சா.1 ஐ வெட்டியது தொடர்பாக தக்கலை நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது என்றும் அது

தொடர்பாக உள்ள முன் விரோதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து பார்க்கும் போது, அ.சா.1 ஐ எதிரி ஏற்கனவே வெட்டியது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் குற்ற எண்ணும் அந்த வழக்கு பற்றிய விவரங்களையும் இவ்வழக்கில் எடுத்துக்காட்டப்படவில்லை. இந்நிலையில் எதிரி மீதான குற்ற வழக்குக்கு அ.சா.1ம் அ.சா.3ம் சாட்சிகளாக இருந்துள்ளார் என்பது எதிரி தரப்பில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கை பொறுத்தவரை எதிரிக்கும் அ.சா.1க்கும் உள்ள முன் விரோதம் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி எடுத்துக்காட்டப்படவில்லை.

22. சம்பவம் 14.1.2018ம் தேதி மாலை 6.45 மணிக்கு நடைபெற்றதாக அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும், அ.சா.ஆ–5 முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சம்பவத்தின் போது உடன் இருந்ததாக குறிப்பிடப்படும் அ.சா2 சம்பவம் நடந்த உடன் வாகனம் மூலம் அ.சா.1ஐ தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்து பார்த்த போது, காயம்பட்டதாக கூறப்படும் அ.சா.1 சுமார் 3.3/4 மணி நேரம் காலதாமதமாக அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் இரவு 10.30 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட அ.சா.1 மறு நாள் காலை 7 மணிக்கு அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 14.1.2018ம் தேதி இரவே காவல்நிலையத்தில் தகவல் கொடுக்கப்பட்டும் ஏன் 12 மணி நேரம் கழித்து புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு அரசுத்தரப்பில் எவ்வித நியாயமான காரணங்களும் எடுத்துக்காட்டப்படவில்லை. 15.1.2018ம் தேதி பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ–5 முதல் தகவல் அறிக்கை பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு 18.1.2018ம் தேதி கிடைக்கப்பெற்றது. மேற்படி 3 நாட்கள் காலதாமதத்திற்கு அரசுதப்பில் எவ்வித நியாயமான காரணங்களும் எடுத்துக்காட்டப்படவில்லை.

23. மேலும் இவ்வழக்கின் எதிரியை 20.1.2018ம் தேதி நீதிமன்ற காவலில் உட்படுத்திய போது சம்பவம் முடிந்து எதிரி அவரது இரு சக்கர வாகனத்தில் ஓடிய போது கீழே விழுந்ததில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் சம்பவ இட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் யாரும் எதிரி அ.சா.1 ஐ அருவாளால் வெட்டிவிட்டு ஓடிய போது கீழே விழுந்தார் என்று சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. 14.1.2018ம் தேதி இரவு 9.45 மணிக்கு தக்கலை அரசு மருத்துவமனையில் எதிரி அனுமதிக்கப்பட்டுள்ள போது எதிரிக்கு இடது முழங்கைக்கு கீழ் 3x 1 x 1 cm அளவிலான சிதைவுக் காயமும், இடது முழங்கைக்கு கீழ் 7x 0.2 cm அளவிலான மெல்லிய நீளமான சிதைவுக் காயமும், வலது முழங்கைக்கு கீழ் 1 x 1 cm அளவிலான சிராய்ப்பு காயமும் ஏற்பட்டதாக மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிக்கு ஏற்பட்ட காயங்களை விட அ.சா.1க்கு அதிகமான காயங்கள் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எதிரிக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்பதை அரசுத்தரப்பு குற்ற இறுதி அறிக்கையிலும் காட்டவில்லை. இந்நீதிமன்றத்திலும் சாட்சிகள் மூலமும் எடுத்துக்காட்டவில்லை. எனவே அரசுத்தரப்பில் கூறப்படுவது போல எதிரி அ.சா.1 ஐ தாக்கினாரா அல்லது அ.சா.1 தாக்கியதில் எதிரிக்கு காயம் ஏற்பட்டதா அல்லது எதிரி தரப்பில் கூறப்படுவது போல எதிரி காவல்நிலையத்தில் வைத்து காவலர்களால் தாக்கப்பட்டாரா என்பது பற்றி நியாயமான சந்தேகங்கள் நீதிமன்றத்திற்கு எழுகிறது.

24. அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு சென்ற போது எதிரி அ.சா.1 ன் மனைவியிடம் சென்று மிரட்டியதாகவும் அவரது மனைவி அ.சா.1யிடம் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தின் போது அ.சா.1 வீட்டிறகு சென்றுவிட்டு அரசு மருத்துவமனைக்கு வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியம் அவரது வாக்குமூலத்திற்கு விரோதமாக உள்ளது. மேலும் சம்பவ நாள் அன்று எதிரியால்

உடைக்கப்பட்டதாக கூறப்படும் இரு சக்கர வாகனமாக TN 75 AT 4397 என்ற வாகனத்தை அ.சா.7 சரி செய்து கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ.3 ரசீதின் படி சந்திரசேகர் என்பவரின் வாகனத்தை சரி செய்து கொடுத்ததாக அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அந்த வாகனம் ரெஜியின் வாகனம் என்று அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவே. அ.சா.7 யாருடைய இரு சக்கர வாகனத்தை சரி செய்து கொடுத்தார் என்ற சங்கதியும் எடுத்துக்காட்டப்படவில்லை.

25. எதிரி அ.சா.1ஐ கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சம்பவ இடத்தில் அருவாளுடன் வந்திருந்தால் அ.சா.1 ஐ ஒரு முறை மட்டும் வெட்டிவிட்டு விட்டிருக்க வாய்ப்பில்லை. மேலும் பலமுறை வெட்டி கொலை செய்ய முயற்சி செய்துதிருப்பார். அ.சா.1க்கு ஏற்பட்ட இதர காயங்கள் யாரால் எப்போது ஏற்பட்டது என்பது குறித்து அ.சா.1 சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

26. எதிரி கெட்ட வார்த்தைகள் பேசியதால் தங்களுக்கு அவமானமும் மற்றும் அருவருப்பும் ஏற்பட்டதாக சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி அரசுத்தரப்பு சாட்சிகளை கொலைமிரட்டல் விடுத்தாக சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிக்கு ஏற்பட் காயங்கள் அரசுத்தரப்பில் எடுத்துக்காட்டாதது இவ்வழக்கின் உண்மை தன்மை மறைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்தில் எழுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341, 294(பி), 307, 427 படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை

எதிரிக்கு வழங்கி எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் ஆர்.பி. எண்2/2024–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.2 –TN 75 L 0290 டி.வி. எஸ். வேகோ இரு சக்கர வாகனம் நீதிமன்ற பாதுகாவலில் இருப்பதால் அதனை மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் ஆர்.பி. எண்26/2023–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1, சா.பொ.3, சா.பொ.4, சா.பொ.5 ஆகியவைகளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.09 17:42:15 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்

**<u>இணைப்பு:–</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | – | திரு.சந்திரசேகர் |
| 2) | அ.சா.2 | – | திரு. ரெஜி |
| 3) | அ.சா.3 | – | திரு. ரவிராஜசேகர் |
| 4) | அ.சா.4 | – | திரு.செல்லப்பன் |
| 5) | அ.சா.5 | – | திரு. செல்வின் |
| 6 | அ.சா.6 | – | திரு. ரமேஷ் |

7) அ.சா.7 – திரு. வினுகுமார்

8) அ.சா.8 – திரு.தங்கவேல்

9) அ.சா.9 – திரு.ஜாண் கிறிஸ்துராஜ்

10 அ.சா.10 – திரு. ரவீந்திரன்

11) அ.சா.11 – திருமதி. சிவசங்கரி

12) அ.சா.12 – திரு. அருள்பிரகாஸ்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் ;</u>

1. அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

2. அ.சா.ஆ.2 – பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து

3. அ.சா.ஆ.3 – ரசீது

4. அ.சா.ஆ.4 – காயச்சான்று

5. அ.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை

6. அ.சா.ஆ.6 – பார்வை மகஜர்

7. அ.சா.ஆ.7 – மாதிரி வரைபடம்

8. அ.சா.ஆ.8 .– ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

9. அ.சா.ஆ.9 – அத்தாட்சி

10. அ.சா.ஆ.10 – அத்தாட்சி

11. அ.சா.ஆ.11 – படிவம் 95

12. அ.சா.ஆ.12 – படிவம் 95

<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u>

சா.பொ.1 – அரிவாள்

சா.பொ.2 – TN 75 C 0290 டி.வி.எஸ். வேகோ இரு சக்கர வாகனம்

சா.பொ.3 – இரு சக்கர வாகனத்தின் உடைந்த முகப்பு விளக்கின் பிளாஸ்டிக் துண்டு

சா.பொ.4 – பின்பக்கம் பார்க்ககூடிய கண்ணாடியின் கவர்

சா.பொ.5 – இண்டிகேட்டர்

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>**

– இல்லை –

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்;</u>**

எ.ம.சா.ஆ–1 – எதிரியின் காயச்சான்றிதழ்

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.09 17:42:23 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்